உ
சிவமயம்
கணபதி துணை

பாண்டிநாட்டின் கண் உள்ள
சமிவனக்ஷேத்திர மென்னும்

ஸ்ரீ கோவிலூர்

ஸ்ரீ முத்திராமலிங்க ஞானதேசிக ஸ்வாமி
யவர்கள் மடாலயத்தில் ஆருவது ஆசாரியராக
எழுந்தருளியிருந்த

ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக ஸ்வாமியவர்கள்

சரித்திரச் சுருக்கம்.

இஃது
ஷி கோவிலூர் மடாலய
வெளியீடு.

காரைக்குடி சௌத் இந்தியா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப் பெற்றது.

...ரியான பராபவ வருஷம்
...க மாதம் (1966)



உ. கோவிலூர் ஆறாவது மடாதிபதி

ஸ்ரீ அண்ணாமலை ஞான தேசிகசுவாமிகள்.

உ

சிவமயம்

கணபதி துணை

பாண்டிநாட்டின் கண் உள்ள

சமிவனக்ஷேத்திர மென்னும்

ஸ்ரீ கோவிலூர்

ஸ்ரீ முத்திராமலிங்க ஞானதேசிக ஸ்வாமி
யவர்கள் மடாலயத்தில் ஆருவது ஆசாரியராக
எழுந்தருளியிருந்த

ஸ்ரீ அண்ணுமலை ஞானதேசிக ஸ்வாமியவர்கள்

சரித்திரச் சுருக்கம்.

இஃது

ஷை கோவிலூர் மடாலய

வெளியீடு.

காரைக்குடி சௌத் இந்தியா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப் பெற்றது.

கலி 5067-க்குச் சரியான பராபவ வருஷம்
கார்த்திகை மாதம் (1966)

விஷய அட்டவணை

24-1

உ

சிவமயம்

ஸ்ரீ கணேசாய நம:

பாண்டிநாட்டில் உள்ள சமிவன க்ஷேத்திரமென்னும் ஸ்ரீ கோவிலூர் முத்திராமலிங்க ஞான தேசிக சுவாமிகள் மடாலய ஆதீனத்தில் ஆருவது பட்டத்து ஞாஞசாரியராக எழுந்தருளி இருந்த ஸ்ரீ அண்ணமலை ஞான தேசிக சுவாமிகளின் சரித்திரச் சுருக்கம்

நாச்சியப்ப செட்டியார் ஏகம்மையாரைத் திருமணம் புரிதல்.

பரத கண்டத்திலே பாண்டிநாடே பழம்பதி என ஸ்ரீமணிவாசகப் பெருந்தகையாற் புகழ்ந்தேத்தப் பெற்ற பாண்டி நாட்டிலே தொண்ணூற்ருறு நகர வட்டகையிலும் ஆயிரத்தெட்டுச் சிவாலயத்திலும் நூற்றெட்டுத்திருப்பதியிலும் ஒன்ருயும், மிக உன்னதமான கல்மலை உடைத்தாயும், சத்திய புஷ்கரணி தீர்த்த முடைத்தாயும், ஸ்ரீ வேணுவனேஸ்வரி சமேத சத்தியகிரீஸ்வரர் எழுந்தருளப்பெற்றதாயும் ஸ்ரீ உஜ்ஜீவன நாச்சியார் சமேத சத்தியமூர்த்திப் பெருமாள் சாந்நித்தியராய் விளங்கப்பெற்றதாயுமுள்ள, ஸ்ரீ திருமைய மென்னும் திவ்ய க்ஷேத்திரத்திற்குக் கிழக்குத் திக்கில் மூன்றுமைல் தூரத்தில் இருப்பதாயும் பாண்டி தீர்த்தத்தை உடையதாயும் ஸ்ரீ தர்மாம்பிகை சமேத சுயம்பிரகாச லிங்கேஸ்

வரர் எழுந்தருளி இருப்பதாயும் விளங்கும் ஆலங்குடி என்னும் பதிக்குத் தெற்குத்திக்கில் ஒருமைல் தூரத்தில் இருப்பதாயும், கலைக்கோட்டு மகரிஷி தவஞ்செய்து பூஜித்தஸ்ரீவடிவுள்ள மங்கைக்கரசி சமேதஸ்ரீ அரும்பொருளீஸ்வரர் எழுந்தருளி இருக்கின்ற வனத்தினிடத்திலே தடாதகைப்பிராட்டியார் தவஞ்செய்ததாயும், கோட்டைக்கரை என விளங்குவதாயும், சொர்ணக்காவி உண்டாவதாயும் ஸ்ரீ மீனாக்ஷி அம்மை ஆலயமுடைத்தாயுமுள்ள செங்கீரை க்ஷேத்திரத்திற்கு மேற்குத்திக்கில் ஒரு மைல் தூரத்திலுள்ளதாயும், மங்கள தீர்த்தமென்ற ஒப்பற்ற சுனையினை உடைத்தாயும், நந்தன் சப்தகுடபோகத்தில் ஒன்றாயும் ஸ்ரீ மங்களநாயகி சமேத ஸ்ரீமலைக்கொழுந்தீஸ்வரர் எழுந்தருளி இருப்பதாயும் விளங்கும் நந்தன் க்ஷேத்திரத்திற்கு வடக்குத்திக்கில் ஒரு மைல் தூரத்தில் உள்ளதாயும் விளங்குகிற ஸ்ரீ பிரசன்ன மீனாக்ஷிஅம்மை சமேத ஸ்ரீபிரசன்ன சோமசுந்தரேஸ்வரர் எழுந்தருளப் பெற்று இனிது விளங்குகிற அழிஞ்சில்வன க்ஷேத்திரமென்னும் இராயபுர நகரத்திலே தனவணிகர் குலத்திலே இரணிக்கோவில் கோத்திரத்திலே இராமஞ் செட்டியார் புத்திரர் நாச்சியப்ப செட்டியாரென்னும் திருப்பெயருடைய ஒரு தனவணிகர் தனமிக்குடையராய் இருந்தார். இவருடைய பருவகாலத்திலே இவரது நற்குணங்களுக்கேற்ப கற்பிற்கரசியாம் புத்திரி ஏகம்மையாரென்னும் ஓர்

ன்னிகையை தமது குல குடிகோத்திர ஸூத்திரங்களுக் கேற்ப நல்ல ஓரையில் பெரியார் பலர் நன்மணம் புரிவித்து இல்லறத்தை இனிது நடாத்தி வரும்படி செய்தனர்.

நாச்சியப்பசெட்டியாரும் அவரது தர்மபத்தினியார் ஏகம்மையாரும் இல்லறம் இனிது நடாத்துதல்.

நாச்சியப்ப செட்டியாரும் அவரது தர்மபத்தினியா ராகிய ஏகம்மையாரும் குருலிங்கசங்கமங்களில் பேரன்பு யுடையவராகவும், இன்சொற்கூறல், விருந்தோம்பல், வறியார்மாட்டு அருளுடைமை யாகியஇரக்கம், இல்வாழ் வோர்க்குரிய நற்குண நற்செய்கை முதலிய தூய்மைக் குணமுடையவராய், இல்லறத்தை இனிது நடாத்தி வந்தனர். இவரது வாழ்க்கையில் பெரிதும் சிவனடியா ரையே சிவமெனப் பாவித்து அவரது பணியையே மேற்கொண்டொழுகி வருவாராயினர்.

நாச்சியப்ப செட்டியாரும் ஏகம்மையாரும் புத்திரப்பேற்றை வேண்டித் தவம் கிடத்தல்.

இவர்கள் இவ்வாறு இல்லறத்தை இனிது நடாத்தி வரும் நாளிலே தனமிகவுடையாரேனும் தமக்கொரு மறுமைப்பேற்றுக்கான நற்புதல்வர் வேண்டுமென மன மிகத்தளர்ந்து, தம்மை நற்கதிக்குய்க்கவல்ல நன்மகன்

வேண்டுமென்றும், இன்றேல் ஞானமிலான் வினை போலும், தியானமிலான் மனம்போலும், மக்களில்லா மனைவாழ்க்கையாமென்றும், சிந்தாகுலராய்த் தமது இல்லிற்கு வரும் சிவனடியார்களை யெல்லாம் வேண்டித் தமது மகவின்றிய குறையை ஓதிவந்தனர். அந்நாளில் ஒரு சிவனடியார் அண்ணுமலை என்னும் க்ஷேத்திரத்தி லிருந்து இராமேஸ்வர யாத்திரை செல்லுபவராய் இவரது வீட்டிற்கு பையிக்கியங்கொள்ள வந்தனர். செட்டியார் இவரிடத்திலும் தமது குறையை வழக்கம் போல் தெரிவிக்க, அந்தச் சிவனடியார் "ஐயா செட்டியாரே நான் கூறுவதைக் கவனமாகக் கேட்க வேண்டும் உங்கள் குலத்திற்கு முழுமுதற்கடவுளான இறைவன் முதலில் தோன்றியது ஸ்ரீ அருணுசல மென்னும் திவ்ய க்ஷேத்திரத்தேயாகும். அது சகல ஆன்ம கோடிகளும் ஆங்காங்கு நின்றுழியே கண்டு, போகமோக்ஷங்களைப்பெறும் பொருட்டு பரமேஸ்வரரே உயர்ந்தமலை வடிவமாக விளங்குமிடம் அதனடிப் பாகத்தில் திவ்யதேஜோமயமாய் நான்கு கோபுரங்க ளோடுங்கூடிய ஒரு சிவாலயமிருக்கின்றது. அதில் தனது இச்சாமாத்திரத்தால் ஆவிர்ப்பவிக்கின்றவளும் கிரு பையே சூலாகக்கொண்டு சராசரப்பிரபஞ்சங்களை ஈன்ற வளுமாகிய ஸ்ரீ உண்ணுமுலையம்மை என்னும் திருநாம முடைய உலகமாதாவோடு ஸ்ரீ அருணுசலேஸ்வரர் சிவலிங்கப்பெருமானுகவிளங்குகின்ருர்.அவர்முன்னெரு

காலத்தில் அந்த அருணசலமென்னும் பதியை அரசு புரிந்து வந்த வல்லாள மஹாராஜன், தமக்குப் புத்திர னில்லாமையால், உம்மைப்போலவே குருலிங்க சங்கமங் களை வழிபட்டுப் புத்திரப்பேற்றை வேண்டி நின்ற காலத்திலே, ஸ்ரீ அண்ணமலையாரே அவருக்குப் புத்திர ஞகத்தோன்றி இன்றளவும் அந்த அரசனுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்துவருகின்றனர். "பிரிவிலா அடியார்க்கென்றும் வாராத செல்வம் வருவிப்பவனவ னன்றோ? ஆகலின் நீரும் உமது பத்தினியாரும் அவ் வருணசலேஸ்வரரைத் துதித்துத் தியானித்து வழிபட்டு வருவீர்களாயின் புத்திரப்பேறு உண்டாகுமென்று உறுதிமொழி புகன்றனர். அச்சிவனடியார் தமக்கு அருமையான மொழி புகன்றமையால், அவர் இராமேஸ் வரம் போகவேண்டிய திரவியமளித்து உபசரித்தனுப்பி விட்டு அன்றுமுதல் தங்கள் குல தெய்வமான ஸ்ரீஉண்ண முலையம்மை சமேத அருணசலேஸ்வரர் வீற்றிருக்கும் திருப்பதிக்குக் கார்த்திகை மாதந்தோறும் திருக்கார்த் திகை உற்சவ சேவைக்குச்சென்றும், திருவிளக்கிட்டும் வழிபட்டும் வருவாராயினர்.

ஸ்ரீ அண்ணமலை ஞானதேசிக சுவாமிகளின் ஜனனம்.

இவ்வாறு ஸ்ரீ அருணசலேஸ்வரரிடத்தும், அவர் அடியவரிடத்தும் தம்பதிகளிருவரும் நெடுங்காலம் வழி பட்டுவரும்போது ஸ்ரீ அருணசலேஸ்வரருடைய திரு

வருளாலே கருவடைந்து பத்துத் திங்களும் சென்ற பிறகு தனவணிக் குலம்செய்த நற்புண்ணியத்தாலும் பிரம்ம வித்தையை அவாவும் முமூட்சுக்களான சந்நியாசிகள் செய்த நற்கருமத்தாலும், பொருள் முதலியவற்றை விரும்பும் யாசகர்கள் செய்த நற்றவத்தினுலும், வடமொழி தென்மொழிகளில் இலக்கிய இலக்கணுதி கருவி நூல்களைக் கற்க விரும்பின வித்தியார்த்திகளும், பிரம்மச்சாரிகளும் செய்த அதிர்ஷ்டத்தினுலும், கலி நாலாயிரத்தித்தொளாயிரத்து எழுபத்து ஒன்றுக்கு பிரமோதூத வருஷம் ஆடி மாதம் நாலாந் தேதி சோம வாரம் சுக்கிலபக்ஷம் சஷ்டி திதி உத்திரட்டாதி (உத்தரம் எனவும்) நட்சத்திரமும் அமிர்த கடிகையும் கூடிய இந்த சுபதினத்தில் உலக ரக்ஷகரான பகவான் தேவகி திருவயிற்றினின்றும் உதித்தாற் போலவும், ஜகத்குரு சங்கர பகவத் பாதாச்சாரியரவர்கள் ஆரியாம்பாள் திருவயிற்றினின்றும் தோன்றினுற் போலவும், ஏகம்மையார் திருவயிற்றினின்றும் ஒரு செல்வத் திருக் குமாரர் திருவவதாரம் செய்தனர். சகோதரர் கதிரேசன் செட்டியார், சிதம்பரம் செட்டியார், லெட்சுமிஅம்மை என ஆண் பெண் மூன்று பேர்கள்.

ஸ்ரீ அண்ணுமலை ஞானதேசிக சுவாமிகள் என்னும் குழவிக்கு நாமகரணம் சூட்டலும், பள்ளியில் கல்வி கற்பித்தலும்.

இவ்வாறு நெடுநாள் தவங்கிடந்து, நல்லோரையில்

பெற்றெடுத்த பிதாவான நாச்சியப்ப செட்டியாரும் தமது குலத்திற்கும், தனத்திற்கும் பொருந்தும்படி, ஜாதககருமம், தானம் முதலியவற்றை வழங்கி அண்ணுமலையார் திருவருளால் தோன்றிய தமது திருக்குழவிக்கு அண்ணுமலை என்னும் பிள்ளைத் திருநாமத்தையும் சூட்டினுர். பின்னர் சௌளம் அன்னப்பிராசனம் முதலிய சடங்குகளையும் செய்து குழந்தையைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்துவரும் நாளிலே, குழந்தையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, இளம்பிறை வளருவது போல வளருவதைக் கண்ட தகப்பனுர் நாச்சியப்ப செட்டியார் பிள்ளையைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினுர். பிள்ளையாரும் இறைவனருளாலும் முற்றவத்தாலும் உதித்தவராகையால், சகல கலைகளையும் குல வித்தையையும், எளிதில் தானே கற்றுத் தேர்ந்து துறவிகளுக்குரிய கல்வி, கேள்வி, வாய்மை, அடக்கம், ஆதரவு முதலிய நற்குண நற்செய்கைகளோடுங் கண்டார் பலரும் அதிசயிக்கும் வண்ணம் வளர்ந்து வந்தனர்.

அருணுசலம் செட்டியாருக்கும் உமையம்மையாருக்கும் பிள்ளையார் அபிமான புத்திரராதல்.

அந்நாளிலே அழிஞ்சி வனமென்னும் க்ஷேத்திரத்திற்கு ஏழு மைல் தூரத்திலிருப்பதாயும், அனந்த நதி சுவேத நதி என்னும் இரு நதிகளும் இருபுறம் சூழப்

பெற்றதாயும், ஸ்ரீ அகிலாண்டநாயகி சமேத அகத்தீஸ்வரர் சிவாலயம் அமையப்பெற்றதாயும் விளங்கும் தனவணிகருக்குச் சிறந்த கழனிவாசல் என்னும் தேனிபட்டி க்ஷேத்திரத்திலே, தனவணிகர் மரபிலே அருணசலம் செட்டியாரும் அவர் மனைவி உமையம்மையாரும் தம்பதிகளாய்த் தலைசிறந்து தனமிக்குடையராய் விதிப்படி ஸ்ரீ சிவகாமி அம்மை சமேத ஸ்ரீமந் நடேசப் பெருமானே பஞ்ச கிருத்தியமும் தன்னுடம்பிலே காண்பிப்பவராதலின், அவரை உபாசித்துவந்தனர். அவர்கள் இல்லறத்தை இனிது நடாத்திவரும் நாளிலே, அருணசலம் செட்டியார் உபாசனையின் புண்ணியத்தினல் "உடம்பினுலாய பயனெல்லாம் உடம்பினுள் உத்தமனைக் காணல்" என்னும் மறைமொழிப்படி, நாம் கோவிலூரை அடைந்து வேதாந்தம் படித்துப் பிறப்பையறுக்க வேண்டுமென்ற நிச்சயமுண்டாய், அப்போது கோவிலூரில் குருமூர்த்திகளாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ சிதம்பர ஞானதேசிக சுவாமிகளைச் சரணமடைந்து அன்னேருக்குச் சீடராய், ஆப்தாதி நான்கு பணிவிடைகளையும் இயற்றி, வேதாந்த சம்பிரதாயமுறைப்படி, ஓதியுணர்ந்து, அவற்றின் பயனை நன்குணர்ந்து, பிரம்ம நிஷ்டாபரராக விளங்கி "அருணசல ஐயா" என்னும் பட்டத்தையும் பெற்றிருக்கும்போது, தங்கள் வருணமாச்சிரமம் சொன்ன பாரகாரியமாறுலும் பலர்க்குபகாரமாக நேரதாச் செய்வர் தீர்ந்த நிலைவிடார் ஜீவன்

முத்தர்'' என்ற மறைப்படி தான் இல்லறத்திலிருப்ப தால் இல்லற இயற்கைப்படி ஒரு தரும புத்திரனை தத்தாகவாகிலும் அடையவேண்டி விசாரித்து, இளமை யிலேயே நற்குண நற்செய்கை, நற்கல்வி கேள்வி களுடன் தலைசிறந்தோங்கும், நமது அண்ணாமலை என்னும் குமாரரை இராயபுரம் சென்று பெற்றோர் மன மகிழும்படி செய்து சர்வதாரி ஹு கார்த்திகை மீ 2 உ தனக்கு சுவீகார புத்திரராக அங்கீகரித்துக்கொண்டார்.

அருணாசலய்யா சுவீகார புத்திரருக்குத் திருமணம் முடித்தல்.

அண்ணாமலை என்னும் குமாரரும் அருணாசலய்யா வுக்குப் புத்திரராக அமைந்த நாள் தொடங்கி, அத் தந்தை தாயரிருவரும் மனமகிழப் பல துறைகளிலும் நடந்துவந்ததோடு, தனக்கு உபாசனா மூர்த்தியான ஸ்ரீமந் நடேசப்பெருமானை வணங்கிக்கொண்டு, தமது குல தருமத்தையும் "திரைகடலோடியும் திரவியம் தேடுதல்" என்று உணர்ந்தோராய்ப் பலமுறை பர்மா தேசம் சென்று, வேண்டிய திரவியம் ஈட்டி வந்தனர். அப்போது அருணாசலய்யா தமது புத்திரருக்குரிய வயது வந்தபடியால், அவருக்கு திருமணம் முடிக்கவேண்டிய ஏற்பாடு செய்தனர். அதுகண்ட அண்ணாமலை என்ற குமாரரவர்களும், தமது பிதாவை நோக்கி "தாங்கள் மாத்திரம் சமுசார பந்தமற்றவராக இருந்து சதா

வேதாந்த பாடமும், அடியார் கூட்டமும், தியான நிஷ்டையும் உடையவராக இருந்து, பரமபதத்திற்கு ஆளாக இருக்கிறீர்கள். ஒன்றுமறியாத என்னை மட்டில் சமுசார பந்தத்தில் தள்ளிவிட எண்ணுகிறீர்களோ? "மனைவி ஒருத்தியே சகல அனர்த்தத்திற்கும் காரணமாவள்", "பாரியை உடையோன் யாவன் அவனுக்கே பற்றும் போகம், நாரியை இல்லாதார்க்குப் போகத்தின் நலமெங்குண்டாம்?" "நெய்விட்ட கருங்குழலார் தம்பால் வைத்த நெஞ்சொழிந்தார் ஐம்புலன் சேர் இன்பம் நேராக் கைவிட்டாரொழியாவானந்த போகக் காமுகராய் முடிந்தபடி காண்மின் காண்மின்" என்று பலதரம் தாங்களே படித்துக்கொண்டிருக்க அடியேன் கேட்டிருக்கின்றேனுகையாலே நான் இப் பிறப்பில் சமுசாரத்தையே வேண்டேன். ஆதலின் தாங்கள் எனக்கு விவாக விஷயமாய்ப் பிரயத்தனம் செய்ய வேண்டா"மென்று பலதரம் புத்திரரும் விவேகத்தோடு மறுக்கவும், அதற்கு அருணுசலய்யாவும் தம் நற்குணப் புத்திரருக்கு "அப்பா நீ கூறும் வார்த்தை மிகப் பொருத்தமானதுதான். எனக்கும் அதுதான் கருத்து ஆனாலும் "ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவற்றுணிபு" என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் ஓதுகின்றார். அசுத்தாந்தக் கரணமுடையவன் செய்துகொள்ளும் சந்நியாசத்திலும், நிஷ்காமமாக இல்லறத்திலிருந்தேவிருந்தோம்பல் முதலிய

தருமங்களைச் செய்தலே சிறப்புடைத்து. அவனே கடவுள் கிருபைக்குச் சீக்கிரம் பாத்திரமாவானென்று பகவானும் கூறுகின்றாராகையால் நீ ஒரு கன்னிகையை மணந்து இல்லிலிருந்து பலருக்கும் உதவி புரிந்து பிறகு பர வைராக்கியம் தோன்றினால் துறவியாகக் கடவா யென்று உறுதிமொழிகளைக் கூறி உடன்படுத்தி, ஸ்ரீ மீனாக்ஷி அம்மை சமேத சுந்தரேஸ்வரர் எழுந்தருளி இருக்கின்ற அரிமழ மென்னும் திரு நகரத்திலே தம் மரபுக்கேற்ற தன வணிக குலத்திலே செல்லப்ப செட்டியார் புத்திரியான சாமுத்திரிகா லெட்சணம் சிறந்து விளங்குகின்ற உமையம்மையாரென்னும் கன்னிகையை, நல்லோரையில் அருணாசலய்யா தம் புத்திரர் அண்ணாமலை என்னும் திருக் குமாரருக்குத் திருமணம் முடித்துவைத்தார்.

ஸ்ரீ அண்ணாமலைஞானதேசிகசுவாமிகளும் உமையம்மையாரும் இல்லறத்தை இனிது நடாத்துதல்.

பின்னர் அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளும் உமையம்மையாரும் ஈருடலுக்கு ஓருயிர்போல இருவரு மிருந்து இல்லறத்திற்கு இன்றியமையாது விளங்கும் அன்புடைமை, இன்சொற் கூறல், விருந்தோம்பல், சுற்றந்தாழல் முதலிய நற்குண நற்செய்கைகளோடு இனிது வாழ்ந்துவரும் நாளிலே, அண்ணாமலை ஞான தேசிக சுவாமிகள் ஸ்ரீ அண்ணாமலையார் அருளால்

தோன்றியபடியாலும், ஜன்மாந்திர புண்ணிய புஞ்ச பரிபாகத்தினலும், இளமை முதல் "பெரியவர் பயின்ற படியே பின்புளோரும் பயில்வர்" என்னும் நியாயப் படியே, தம் பிதா உபாசித்துவந்த தன் அங்க அமைப் பிலேயே ஐந்து தொழிலேயும் காட்டும் ஸ்ரீமந் நடேசப் பெருமானரது பூமலிந்த கற்பகத்தரு முதலிய இந்திராதி யர் பொருளேயும் நால் நிலவளப்பங்களேயும், ஏனைய புவனங்களேயும் எண்ணற்ற உயிர்களேயும் தானே தோன்றச்செய்தது தமருகம் ஏந்திய திருக்கரமே யாகுமென்றும், தனித்தனி வகுத்த சராசரப் பொருள் களேக் காப்பது அமைத்த தோற்ற முடைய அபயகரமேயாகுமென்றும், தோன்றி நின்ற சராசரப் பொருளே ஒடுக்குவது ஆரழலமைத்த மழுக்கரமே யாகுமென்றும், முயலகனே ஒத்த ஜீவகோடிகள் இயற்றிய, நல்வினே தீவினேகளேத் தெரியாது மறைத்து வைத்துக்கொண்டு, அவை பக்குவமாகுந்தோறும், அவர்களுக்கு அவற்றின் பயனுன இன்ப துன்பங்களே ஊட்டுவது முயலகன் மீது ஊன்றிய பதமேயாகு மென்றும், விவேகாதி சாதன சம்பன்னராய்த் தம்மைச் சரண்புகுந்த அன்பருக்கு அளவில் பேரின்பமளிப்பது ஜகன்மாதா ஸ்ரீ சிவகாமியம்மை சொரூபமான மன்றி லாட எடுத்த இடது திருப்பாதமேயாகுமென்றும், அவ் வானந்தமூர்த்தியினே யாம் உபாசித்தல் வேண்டு மென்றும் வழிபட்டு வருவாராயினர். அந்த வழிபாட்டுப்

புண்ணியத்தால் "உண்மைப் பொருளை உணர்தல் வேண்டும். அதற்கு அடியார் கூட்டம் காரணமாகு" மென்று ஸ்ரீ உமையாம்பிகை சமேத வீரசேகர சிவபெருமானார் விளங்குகின்ற சாக்கோட்டை என்னும் திருத்தலத்திலே விளங்கும் ஸ்ரீ இராமசுவாமி சுவாமிகள் வேதாந்த மடாலயத்திலே வசிக்கும் அடியார்களிடம் சென்று, அவர் மாட்டும் ஆண்டு ஆச்சார்ய மூர்த்தமாக விளங்கும் ஸ்ரீ வீரப்ப ஞானதேசிக சுவாமிகளிடத்தும் பேரன்புடையராக வழிபட்டும், உதாரத்தோடு அன்னுருக்கு வேண்டிய பொருளளித்துக்கொண்டும், அவர் கூறும் உபதேச உறுதி மொழிகளைக் கேட்டும் வந்தார். அதனால் சம்பிரதாய வேதாந்த பாடத்தின் பொருளும் நன்கு விளங்கப்பட்டார். அந்த வீரப்ப ஞானதேசிக சுவாமிகளிடம் சந்நியாசம் பெறும் விருப்பத்தைத் தெரிவித்தாரேனும், அவர்களைச் சீட விதிப்படி அடையாமையாலும் இவர்களது குடும்பம் பெரியதும், ஜனக்கட்டும் பணக்கட்டுமுடையதாகையால், அன்னோர் நம்மைக் குறித்து வருத்தமுறுவரென்றெண்ணி ஸ்ரீமத் சுவாமிகளுக்குச் சந்நியாசம் கொடுக்காமலும் வேறிடத்தில் சென்று சந்நியாசம் செய்துகொள்ளும்படி சொல்லாமலும் சிற்சில நீதி வாய்ந்த நூல்களை மட்டிலும் போதனை செய்துகொண்டு மிருந்தனர். அவற்றைச் சிரவணித்துக்கொண்டு சுவாமிகள் இவ்வாறு சில காலம் நடந்து வரும்போது சுவாமிகளுக்கு விவேகாதி சாத

னங்கள் மிக்க தீவிரமாய் வளர்ந்துவந்தன.

ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளவர்கள்

துறவாச்சிரமம் கொள்ளக் கோவிலூருக்குச் செல்லுதல்.

இவ்வாறு ஸ்ரீமத் சுவாமிகள் இல்லறத்திலே இருந்தும் பெரியோர்கள் கூட்டுறவால் கல்வி, அருள், ஆதரவு, தூய்மை. உபாசனை, முதலிய நற்குணங்களோடு வாழ்ந்தும் வரும்போது தமக்குப் புத்திரனில்லாமையைக் குறித்து நம் பெருஞ் செல்வம் எவர் அனுபவிப்பவர் எனச் சிறிதும் வியசனமின்றி, இறைவனருளால் மனந் தூய்மையாய்ப் பாலையும் நீரையும் அன்னம் வேறு பிரிப்பதுபோலத் தனக்குத்தானே நித்தியா நித்திய வஸ்து விவேகம் அனுயாசமாக உதயமாயிற்று. அதனால் "இமைத்து விழிப்பதற்கு இல்லை வாணாள் இதிலுள்ள துன்பங்கள் எண்ணில் கோடி" என்றும் "மின்னினும் நொய்திவ்வுடம்பின் தன்மை மேன்மேலும் வந்திடும் வேதனைகளென்றும்" "பொன்றுமுடம்பு பொருந்துமின்பம் புன்னுனி நீராகும்" என்றும் "சூத்திராதியாகத் தொழுகுலத்தவரேனும், மூத்திரக்குழியிலாழ்ந்து மூழ்கிய பின்னரேனும், காத்திரத்தானேரின்பம் கடையென இகழ்ந்து, மூன்று, நேத்திரத்தானை நோக்கி நெடுவனம் புகுதல் வேண்டும்" என்றும் கூறும் நியாயங்களை மனதிலோர்ந்து உலகிலோர் பற்று

மின்றித் தீவிர வைராக்கியம் தோன்றி ஸ்ரீ சற்குருவைச் சரண்புகுந்து வேதாந்த நூல்களைத் தெருண்டு உய்தல் வேண்டுமென்று, நெடுநாள் சிந்தித்துக்கொண்டிருக்கும் போது தமக்கு நெருங்கின சுற்றத்தார் கூட்டம் ஆண் பாலாரும் பெண்பாலாரும் மிக ஆரவாரத்தோடு இராமேஸ்வர யாத்திரை செய்ய எழுந்தது. அதனுடன் சுவாமிகளும் தம் மனைவியாரோடு கூடி யாத்திரைக்குச் சென்று சேது தெரிசனம் ஸ்நானம் செய்து, ஸ்ரீ பர்வத வர்த்தனி சமேத ஸ்ரீ இராமனாத சிவலிங்கப் பெருமானைத் தெரிசனம் செய்து, இச் சமுசாரக் கடலினின்றும் என்னைக் கரையேற்ற வேண்டுமென்று, துதி செய்து பிரார்த்தித்துக் கொண்டு, திருப்புல்லணையில் ஸ்ரீ அலமேலுமங்கை சமேத ஸ்ரீஜகந்நாதப்பெருமானையும் உத்தரகோசமங்கையில் ஸ்ரீ மங்கள நாயகி சமேத ஸ்ரீ மங்கள நாத சுவாமியையும் தெரிசனம் செய்துகொண்டு, அன்பருக்கு அறுபத்து நான்கு திருவிளையாடல் புரிந்த ஸ்ரீ அங்கயற்கண்ணி சமேத ஸ்ரீ சோமசுந்தரப்பெருமான் விளங்குகின்ற மதுரைப் பதியை அடைந்தனர். ஆண்டு உடன்வந்த கூட்டத்தார் செய்கின்றதும், தமக்குப் பிரிய மற்றதுமான வீண்தொழில்களைக் கண்டு இயற்கையிலேயே மனமோய்ந்திருக்கும் நமது சுவாமிகள், தாம் அவர்களைவிட்டுத் தனித்துத் தம்மூர் போகவேண்டுமென்று நினைத்துத் தமது தருமபத்தினியாராகிய உமையம்மையாரை அழைக்கும்போது, அவ்வம்மையார்

பந்துக்களின் வாஞ்சையாலும் பெண்பாலாகையாலும் நமது சுவாமிகளின் துறவு புண்ணியம் அம்மையாரை தூண்டுதலினலும் "நாம் மட்டில் பந்துக்களை இடை வெளியில் விட்டுப் பிரிதல் உசிதமன்று. நாம் பந்துக் களோடு வீட்டைவிட்டுப் புறப்பட்ட வண்ணமே கூட்ட மாய்ப் போய்ச் சேரவேண்டும். இவரன்றோ நன்மை தீமைகளுக்கு உதவிபுரிபவர்கள்?" என்று கூறினர்கள். அதைக் கேட்ட நமது சுவாமிகளுக்குத் தமக்குத் துறவுக்கு நல்ல சந்தர்ப்பம் மனைவியின் வாய்மொழி யாலே கிடைத்தது என்று மனமகிழ்ந்து "நீ வேண்டு மானல் உன் சுற்றத்தோடே வருவாயாக. நான் முன்னே போகின்றேன். எனக்கு உன்னை ஒழித்துத் தனித்துச் செய்யவேண்டிய முக்கியமான வேலை இருக் கின்றது" என்று கூறிவிட்டு வீட்டிற்குவந்து அங்குள் ளாரிடம் துறவில் தமக்குள்ள அபிப்யிராயத்தைக் கூறித் தாயாரிடம் உத்தரவுபெற்று, தாயார் கையால் அரிசிப் பிச்சை கொடுக்கப் பெற்றுக்கொண்டு, சற்குருவின் சந்திப்பிற்குரிய பொருளைக் கையிற்கொண்டு மகா தபோதனராகிய மதுப்பிரிய மஹரிஷியின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீ சாலிவாடீஸ்வரி அம்மை சமேத ஸ்ரீ இராஜகட்கபரமேஸ்வரர் விளங்குவதாயும் " வீசுசெந்தழல் வெய்யவனிற்பொலி, தேசுமிக்கவர் யாவையும் தேர்ந்தவர், மாசுதீர் சன்னியாச நல்வாழ்க்கையர், மூசுகின்ற வளங்களு

மொய்க்குமால், " வேதவித்திவரென்ன விளங்குவார் காதவித்தைதகழன்ற மனத்தினர், போதவித்தகராய்ப் பொலியந்தணர், தீதவித்துச் செறிவரோர்பாலெலாம் " என்று புகழ்பெற்றதாயும் விளங்கும், சமிவனக்ஷேத்திர மென்னும் கோவிலூரில், ஸ்ரீ முத்திராமலிங்க ஞான தேசிக சுவாமிகளின் ஆதீனத்தில் ஐந்தாவது பட்டத்தில் குருமூர்த்தமாய் யெழுந்தருளி இருப்பவர்களும், பொறுமையில், பூமிதேவி என்றும், தருமரென்றும், கொடையில் கர்ணன், சிபிச்சக்கரவரத்தி ஜீமுதவாகன், ததீசி என்றும், வாக்கில் பிரகஸ்பதி, வேதா என்றும், ஞானத்தில் ஜனகர், கபிலரென்றும், சிவப்பணியில் மாணிக்கவாசகர், வாணாசுரரென்றும், உபதேசத்தில் வசிட்டர், யாக்ஞவல்கிய ரென்றும், கண்டார் பலரும் புகழும்படியான ஜீவகருணைமுதலிய நான்குமே ஒருருவம் தாங்கிவந்தாற்போன்ற பிரம்மநிஷ்ட ஸ்ரீவீரசேகரஞான தேசிக சுவாமிகளைச் சரணடைந்து உடல்பொருள் ஆவி மூன்றையும் தானம் செய்து, ஆப்தாதி நான்கு பணிகளையும் குருபரனார் மனமகிழும்படி செய்துவருவாராயினர்.

ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் குருமூர்த்தியவர்களிடம் வேதாந்தபாடம் பயிலுதல்.

இவ்வாறு அண்ணாமலை ஞானதேசிகரவர்களும் சீடருக்குரிய சாதனங்களில் யாதொரு குறைவுமின்றி, விளங்கி, துரியாசிரமத்தையும் அடைய விருப்பமுடைய

வராக இருந்துவந்தாரேனும், குரவர் பெருமான்மேலும் பக்குவம் சோதித்தே ஆஸ்ரமம் கொடுத்து உபதேசிக்க வேண்டுமென்று தமது சிஷ்ய சிகாமணியைப் பலவித மான தொழில்களில் ஏவிவந்தனர். அத்தொழில்களை எல்லாம் மனவருத்தமின்றி அன்போடு செய்துவரும் போது, ஆசிரியப் பெருமான் மனமகிழ்ந்தாரேனும், சீடருக்குச் சந்நியாச ஆஸ்ரமம் கொடுக்காமல் ஏனைய சுரோத்ர சம்பந்தமான தத்துவமசி மகாவாக்கியத்தை உபதேசித்துஏனைய பிரமசாரிகளோடு ஒருவராகவைத்து ஞானவாசிட்டமெனும் அரும்பெரும் ஞானநூல் நீங்க லாக நாநாஜீவவாதக்கட்டளை முதல் பிரம்ம கீதைவரை தமது மடத்தின் சம்பிரதாயப் பாடங்களையும் மற்ற தோத்திரப் பாடங்களையும் உபதேசித்து வந்தார். அப்போது ஸ்ரீ அண்ணாமலைஞான தேசிகசுவாமிகள் சிரவணத்தோடு மனன நிதித்தியாசனங்களையும் உடன் பழகித்தன்னுடைய சகாபாடியாகிய, ஸ்ரீ வெள்ளியங்கிரி சுவாமிகள் முதலிய பெரியாரோடு, கேட்ட பொருள்களை மிகஅழுத்தமாகச்சிந்தனை செய்து, பிரமாணுதி சந்தேகம் நீங்கி எப்போதும் நிதித்தியாசனபரராக இருந்து வருவாராயினர்.

ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் துறவாஸ்ரமத்தைக் கைக் கொள்ளுதல்.

இவ்வாறு ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிள

வர்கள் வெளிவாசனையற்று. என்றும் உள்முகத்தோடும் இருக்கும் இயல்பைக்கண்ட ஞானசாரியரவர்களும், "இனிமேல் இவருக்கு, முன்கரணத்து ஊறியுள்ள பொருளாதி வாசனைகள் நலிதலைச் செய்யாவாகலின், சந்நியாசத்தைக் கொடுப்போமென்று நினைத்தார்களேனும், முன்னுள்ள மனைவி முதலிய பந்துக்கள் கண்டு வருத்தமுறுவாராதலின், தூரத்திற்சென்று ஒரு க்ஷேத்திரத்தில் சன்னியாசத்தைச் தரிக்கச்செய்ய வேண்டுமென்று குரவர் பெருமான் திருமனத்திற் குறித்து, ஒரு காவி வேஷ்டியைக் கையிற் கொடுத்து "புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு ஐமேலுந்தி, அலமந்தபோதாக அஞ்சேலென்று அருள் செய்வானு" கிய ஸ்ரீ அறம்வளர்த்த நாயகிசமேத செம்பொற்சோதீஸ்வரர் அமரும் கோவிலையுடைய திருவையாறு என்னும் பஞ்சநதி புண்ணிய க்ஷேத்திரம் போய் நதியிலிருந்து "பூ:சன்யஸ்தம்மயா:" புவ: சன்யஸ்தம்மயா: சுவ சன்யஸ்தம்மயா" என்னும் "மூன்றுலகாசையும் விட்டேன் சர்வபூத அபயப் பிரதானமளிக்கின்றேன்" என்ற பொருளுடைய பிரேஷ மந்திரத்தை உச்சரித்து, சிகை, யக்ஞோப வீதம் இருப்பதாகப் பாவித்து, அவற்றையும் வஸ்திரத்தையும் எடுத்து ஆற்றில்போட்டு "சமுத்திரம் கச்ச" என்று சொல்லிக்

கரையேறிக் காவிவஸ்திரத்தைத் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் வைத்து அம்மூர்த்தியை நாஞகப்பாவித்து வணங்கி எடுத்து உடுத்திக்கொண்டு சந்நியாசம் திடமாதற்பொருட்டு, சோழநாட்டிலுள்ள சில மூர்த்தி தலத்தீர்த்தங்களைக் கையாற் பயிக்கமேற்றுண்டு தெரிசித்துக்கொண்டுவர வேண்டுமென்று குருபரனுர் ஆக்ஞையிட்டருளினுர்.

ஸ்ரீ அண்ணுமலை ஞானதேசிக சுவாமிகள் அவர்கள் சோஞட்டில் சில க்ஷேத்திர யாத்திரை செய்தல்.

ஸ்ரீ அண்ணுமலை ஞானதேசிக சுவாமிகளவர்களும் குருபெருமானின் ஆணைப்படியே அப்பர் சுவாமிகளுக்கு இறைவன் கைலாயமாகக் காட்டிய திருவையாறென்னும் திவ்ய க்ஷேத்திரத்திற்குச்சென்று குரவர் பெருமானிடம் முன்னமே சந்நியாசம்பெற்ருரேனும் வெளிப்படையான இலிங்க சந்நியாசத்தை ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தி முன்னிலையில் பெற்றுத்தமது குருமூர்த்தியையும் ஆண்டவரையும் உபாசஞமூர்த்தி ஸ்ரீமந் நடேசப்பெருமானையும் அங்குள்ள ஸ்ரீ அறம்வளர்த்த நாயகி சமேத செம்பொற் சோதீஸ்வரரையும் வலம்வந்து மனமுருகப்பாடி வணங்கிக் கொண்டு, அத்தலத்தைப் பிரிவாற்ருமையோடு நீங்கித்திருமழபாடி முதலிய சிவக்ஷேத்திரங்களையும் விஷ்ணு க்ஷேத்திரங்களையும் அடைந்து, உள்ள

முருக ஊரைப்பணிந்து தெரிசனம் செய்துகொண்டு உச்சியம்போதில் அங்கையிற்பிக்ஷை யேற்றுண்டு ஏகாந்தத்தலத்தில் பரம்பொருளாம் சிவனை ஆன்மாவோடு ஐக்கியமுறக்கண்டும் இவ்வாறு ஒருவர்க்கும் கிட்டற்கரிய வைராக்கியம், போதம், உபரதி என்னும் மிகமிக உயர்தர சாதனங்களோடு ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளென்னும் நமது குருதேவர் விளங்கி வந்தனர்.

ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் தங்குருமூர்த்திகளைத் தெரிசிக்க அவரைக்கொண்டு மீண்டுவருதலும் மடாலய நிர்வாகக்காரியங்களில் ஏவப்படுதலும்.

இவ்வாறு ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் திருமழபாடி, திருப்புனல்வாசல், பசுபதி கோயில், தஞ்சாவூர் முதலிய சில இடங்களில் சஞ்சரித்துவரும் போது, தாயைப்பிரிந்தகன்றெனப்பத்தமது குருநாதரைத் தெரிசிக்க மிகத்தீவிரமான எண்ணமுண்டாய்க் கோவிலூரையடைந்து ஞானசாரியரைத் தெரிசித்து, முன்னிலும் பன்மடங்கு பக்தி விநயங்களோடு விளங்கி வரும்போது, ஞானசாரியாரவர்களும் குருஸ்தானமாகிய தன்னுடைய இடத்தை வகிக்கும் திறமை இவருக்கு உண்டு என்று எண்ணியவர்களாய் மடத்திலுள்ள ரொக்கப்பொறுப்பான காரியங்களிலும், மடத்து

மேற்பார்வைக் காரியங்களிலும்ஏவ அதற்கு ஒருப்பட்டுப் பார்த்து வந்தனர். மேலும் குருபரனோடு ஸ்ரீ திருநெல்லை நாயகி அம்மையார் ஆலயஜீரணோத்தாரணத் திருப்பணி விஷயமாய் யாத்திரை செய்தும் ஆங்காங்குள்ள விவகாரங்களையும் உணர்ந்து குருதேவரில்லாமல் தான் மாத்திரம் தனித்தும் சில சமயங்களில் மடத்திற்கும் ஆலயத் திருப்பணிக்கும் வேண்டிய சிலகாரியங்களையும் செய்துவந்தனர்.

ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிகசுவாமிகள் ஞானவாசிட்டப் பாடங்கேட்டலும், இரண்டாம பாடம் சொல்லுதலும்.

இவ்வாறு சிலகாலம் ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் நடந்துவருவதைக் கண்ட ஆசிரியப் பெருமானார் மனமிக மகிழ்வுற்று; முன்னர் சிரவணிக்கப்படாமலிருப்பதாயும், சித்தவிஸ்ராந்திக்கு ஏதுவாயும் பெரியோராலறியும்பெருமை சான்றதாயும் சிறியோரால் பொருந்த ஒண்ணாததாயும்' ஸ்ரீவசிட்டமுனிவரால் ஸ்ரீராமப்பெருமானுக்கு உபதேசிக்கப்பட்டதாயும்; அநேக இதிகாசங்களடங்கியதாயும், ஞானநூல்களில் தலைமை வாய்ந்ததாயுமிருக்கும் ஸ்ரீஞானவாசிட்டமென்னும் ஜீவன் முத்திக்கேதுவான சாஸ்திரத்தையும் ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளுக்கு நன் முகூர்த்தத்தில் மனமகிழ்வோடு பாடம் சொல்லத்

தொடங்கி, கோவிலுர் சிஷ்டாசாரமுறைப்படி நிர்விக்கினமாய்ப் பாடம் சொல்லிச் சம்பூரணம் செய்தனர். இங்ஙனம் எடுத்த பாடத்தை முடித்து ஏடுவாங்குவது என்ற முறைமையில் இந்த வாசிட்டப்பூர்த்திக்கு ஏராளமான திரவியச் செலவில் பலசாமான்களை வரவழைத்தும், தமக்கு ஆதி குருஸ்தானமான சிக்கல் ஸ்ரீ உகந்தலிங்கஞான தேசிக சுவாமிகளின் ஆதீனத்தில் குருமூர்த்தமாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ சுப்பிரமணிய ஞானதேசிக சுவாமிகள் அவர்களையும், சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பல ஞானதேசிக சுவாமிகள் அவர்களையும், மற்றும் வளவனூர் முதலியமடங்களிலிருந்த பெரியோர்களையும் அடியார்களையும், அன்போடுவரவழைத்து கைலாசக் கொட்டகையைக் கைலாசம்போல அலங்கரித்து, மேற்சொன்ன மூன்று குருமூர்த்திகளையும் தக்கபீடங்களில் அமர்த்திப் பிரமாதி மும்மூர்த்திகளென அலங்கரித்து சோடசோபசாரம் செய்து, மாகேஸ்வர பூஜை முதலியவற்றையும் செய்து, அன்று கோவிலூரிலிருக்கும் அந்தணர்களுக்கு அமுதிட்டும், ஸ்ரீ திருநெல்லைநாயகி சமேத ஸ்ரீ ராஜகட்கபரமேஸ்வரருக்கும் அபிஷேக ஆராதனை அலங்காரங்களும் செய்து, இரவு பஞ்சமூர்த்திகளையும் திருவீதியில் திருஉலாவரச்செய்தும், இவ்வாறு சிறப்போடு ஞானவாசிட்டத்தைப் பூர்த்தி செய்தனர். அன்றுமுதல் ஸ்ரீ அண்ணாமலைஞானதேசிக சுவாமிகளைக் குருமூர்த்தியவர்கள் இரண்டாம் பாடம் சொல்லும்படி

கட்டளை இட்டருளினார்கள். அவ்வாக்ஞையைச் சிரமேற் கொண்ட ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளும் மடத்தின் மாணவர்களுக்கு இரண்டாம்பாடம் சொல்லி வருவதால் இரண்டாம் பாடத்துச் சுவாமிகளென்றும், ஒரு திருநாமம் விளங்கி வந்தது. இடையில் ஸ்ரீவெள்ளியங்கிரி சுவாமிகளோடு நிகழ்ந்த விவாதத்தால் மானாமதுரை, திருவையாறு முதலிய இடங்களுக்குச் சென்றிருந்து ஸ்ரீவெள்ளியங்கிரி சுவாமிகள் ஆள்விட்டு அழைக்க மீண்டு வந்தனர்.

ஸ்ரீ அண்ணாமலைஞானதேசிக சுவாமிகள் ஸ்ரீ காசிமுதலிய க்ஷேத்திர யாத்திரை செல்லுதலும் ஆண்டு வடமொழியைக் கற்றலும்.

இவ்வாறிருக்கும் நாளிலே, ஸ்ரீகுருமூர்த்தியவர்களும் ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிகசுவாமிகளவர்களின் பக்குவத்தை யுணர்ந்து, தமக்குப்பின் தமது ஸ்தானத்தில் ஆசாரியராக இருக்க இவர் யோக்கியமானவரென்று நன்றாக நிச்சயம் செய்து, ஆங்காங்குள்ள மனிதர்களினதும் மூர்த்தி தல தீர்த்தங்களினதுமான, ஆசார அனுஷ்டான வைபவங்கள் இவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். தெரிந்தால்தான் இங்கு வரும் யாத்திரைவாசிகளின் கஷ்டநஷ்டங்கள் தெரிந்து அவர்களை உபசரிக்க ஏதுவாகும் என்று நிச்சயங்கொண்ட

கருணாமூர்த்தியான குருதேவரவர்களும் "அப்பா அண்ணாமலை, நீ இதுகாறும் இங்கிருந்து எல்லாம் உணர்ந்தனை, இனிமேல் காசி முதலிய க்ஷேத்திர யாத்திரையைச் செய்தும், வேதாந்தம் வடமொழிக் கலப்பாக இருக்கின்றபடியால் அம்மொழியினைப் பயின்றும் கூடிய சீக்கிரம் வந்து சேரவேண்டு"மென்று குருமூர்த்தியர்களும் கட்டளையிட்டருளினார்கள். அவ்வாணையைச் சிரமேற்கொண்டு ஸ்ரீமத்காசிகானந்த சுவாமிகளையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு விசுவாவசு-ஞு ஆடி-மீ ஸ்ரீகுருமூர்த்திகளின் பிரிவாற்றாமையால் மனதில் தியானித்த வடிவோடு எங்ஙனமோ அரிதில் நீங்கி, முதலில் சேது முதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, ஸ்ரீபர்வதவர்த்தனிசமேத ஸ்ரீராமனாத சிவலிங்கப்பெருமானையும் பூஜித்து வணங்கி ஸ்நானதான ஜபத்தியானத்தோடு, கோகர்ண முதலிய க்ஷேத்திரங்களையும் தெரிசித்துச் செல்லும்போது, தமக்கு ஆதிகுருபீடமான சிருங்ககிரிக்குச் சென்று ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத்பூஜ்யபாதாசாரிய சுவாமிகளாகிய ஸ்ரீநரசிம்மபாரதி சுவாமிகளையும் ஸ்ரீசாரதா தேவியையும் தெரிசனம் செய்துகொண்டு; மரணமாத்திரத்தால் மகாதேவர் ஞானோபதேசம் செய்து, சகல ஜீவகோடிகளுக்கும் விதேகமோக்ஷத்தைக் கொடுப்பதாயும், அவிமுக்த க்ஷேத்திரமென்றும், வாரணாசி என்றும், திருநாமமுடையதாயும் விளங்கும் ஸ்ரீகாசியம்

பதியை யடைந்து, ஆண்டு பகீரதன் தவத்திற்கு திரியம்பகர் ஜடாபாரத்தினின்றும் இறங்கினதாயும் படிந்தோர் பாவத்தைப் பறிப்பதாயும், விளங்கும் பாகீரதியில் மூழ்கியும், ஸ்ரீ துண்டிவிநாயகரைத் தெரிசித்தும் ஸ்ரீ அன்னபூரணி அம்மையை தெரிசித்து ஸ்ரீவிசாலாட்சியம்மை சமேத ஸ்ரீ விஸ்வநாத சிவலிங்கப் பெருமானுக்கு நிர்மலமான கங்கா நீரால் தம்கரத்தால் திருமஞ்சனமாட்டிப் பத்திரபுஷ்பத்தால் அர்ச்சித்து பூமியில் தண்டம் போல் விழுந்து பக்திபரவசத்தால் வணங்கிப் பலவிதமான தோத்திரங்கள் செய்து, மற்றும் ஸ்ரீ காலபைரவாதிமூர்த்திகளையும் வணங்கியும்; சிலகாலம் அத்தலத்தில் தானே குருநாதரவர்கள் தங்கினார்கள்.

அங்ஙனம் சிலகாலம் சென்ற பின்னர் ஸ்ரீகாசிப் பதியை நீங்கி பிரயாகை, அயோத்தி, மதுரா, பிருந்தாவனம், துவாரகை, குருக்ஷேத்திரம் ஹரித்துவாரம், இருஷிகேசம் முதலிய புண்ணியப்பதிகளை யடைந்து ஆங்காங்குள்ள மூர்த்தி தல தீர்த்தங்களையும் பெரியோர்களையுஞ் சேவித்துக்கொண்டு, பத்ரிநாராயணம் போக எண்ணி காடுமலை மிருகம் முதலியன நிரம்பின வழியாகப் பாதசாரியாய்ச் சென்று ஸ்ரீபசுபதி ஈசுவரர் விளங்கும் நேப்பாளம் போய்த் தரிசித்து பத்திரிகேதாஞ்சென்று தரிசித்துப் பின்வாதராயணர்வசித்து வரும் ஸ்ரீ நாராயண பகவான் நரநாராயணராய் வசிக்

கின்ற மகாமகிமை வாய்ந்த பத்திரிகா க்ஷேத்திரத்தை யடைந்து, ஆண்டு ஸ்ரீ நாராயணமூர்த்தியை வணங்கித் துதித்துப் பக்திபரவசராய் ஆண்டுச் சிலகாலம் வசித்து வந்தனர். மீண்டும் அம்மூர்த்தியினிடம் விடைபெற்றுக் கொண்டு முன் சென்ற கடுமையான வழியாகவே பாத சாரியாகவந்துஸ்ரீகாசிப்பதியை யடைந்து,ஸ்ரீவிசாலாக்ஷி விசுவநாதர் முதலிய மூர்த்திகள், கங்கை முதலிய தீர்த் தங்கள் இவற்றைச் சேவித்துக்கொண்டு, சிலகாலம் அப்பதியில் தம் குருமூர்த்தி ஏவினபணியான வடமொழி கற்றல் என்னும் பணியையும் சில காலம் செய்து கொண்டு வரும்போது ஆராய்ச்சியாலும் புண்ணியப் பதிவாசத்தாலும் நீண்டதெளிவுடைமை, ஒளியுடைமை, உண்மை நிகழ்வுடைமை, அறிவுடைமை, நீங்கா மெய்மை, மாண்ட சுகமுடைமை, உபசாந்த நீர்மை மகிழ்வுடைமை, நிறைவுடைமை, மகிமை பான்மை ஆவரணமில்லாமை, உதாரத் தன்மை, அழியாத தேசுடைமை, அகண்ட நீர்மை, யாதும் தானு முறைமை அச்சமின்மை, ஏகமாம் தன்மை, மனமெழுந்தோடாமை, ஓவலிலாதுடனுறைதல் இக்குணங்களுடன் சமாதி நிலையில் எமது குருநாதர் சிலகாலம் விளங்கிவந்தனர்.

அங்ஙனம் வசித்துவரும் நாளிலே ஞானாசிரியர் தமக்கிட்ட பணி முற்றினபடியாலும், கோவிலூர் மடாலயத்தில் குருமூர்த்தமாய் எழுந்தருள வேண்டித்

தெய்வம் தூண்டுகின்றபடியாலும், எமது குருநாதருக்குத் தமது குருதேவரை தெரிசிக்கவேணுமென்ற தீவிரமான ஆசை தூண்டியது. அதனுல் அப்பதியைப் பிரிவாற்ருமையோடு அரிதில் நீங்கி மத்தியிலுள்ள ஜெகன்ஞதம், திருக்காளத்தி காஞ்சி, சிதம்பரம், திருவாரூர், மதுரை முதலிய புண்ணியப்பதிகளைத் தெரிசித்துக்கொண்டு சேதுவை அடைந்து ஸ்நானம் செய்து, ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத இராமலிங்கேஸ்வரரையும் தெரிசித்து, சமிவனக்ஷேத்திரமென்னும் கோவிலூரையடைந்து தமது குருமூர்த்திகளை ஆராத அன்போடிபணிந்து தொண்டு செய்து முன்போல் இரண்டாம் பாடம் சொல்லிக்கொண்டு தமது சுவானுபவ நிஷ்டையிலேயே எப்போதும் நிலவி வந்தனர்.

ஸ்ரீ அண்ணுமலைஞானதேசிகசுவாமிகள் குருஸ்தானத்தை வகிக்கும் மடாதிபதியாதலும் பாடம் சொல்லுதலும்.

இவ்வாறு சின்ஞள் கழிந்தபின்பு ஸ்ரீ மாணிக்கவாசகரைப்போல் விளங்கின தமதுகுருமூர்த்தி ஸ்ரீவீரப்பஞானதேசிக சுவாமிகளவர்கள் விரோதி கிருது ஞூ வைகாசிமீ இருபத்தி ஏழாம் தேதி வெள்ளிக்கிழமை விசாக நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் ஸ்ரீ அமிர்தவல்லி சமேத பாரிஜாதவனேஸ்வரர் முதலிய பஞ்சமூர்த்திகளும் இரதாரூடராய்ப் பவனி வரும்போது, தெற்கு ரதவீதியில் ஸ்ரீ சிவகாமி அம்மைசமேத சபா

நாயகர் சன்னிதானத்தில், துருவாஸருக்கு நடன தெரிசனம் கொடுத்த இடத்தில் பஞ்சரதங்களுக்கு முன்னிலேயில் காலை பத்து நாழிகையளவில் அகண்டபரிபூரண சச்சிதானந்தசிவமயமான விதேககைவல்யமடைந்தனர். ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளவர்களும் தமது ஞானாசிரியருக்கு சமாதிப்பிரஷ்டையை வெகுவிமரிசையாகப்புரிந்தனர். அப்போது எல்லா மடங்களிலுமிருந்து வந்து கூடிய அடியார்களும், பெரியோர்களும், தனவணிகர்களும், மும்மூர்த்திகளின் திருநோக்கப்படியே "தாங்கள் மடாதிபதியாக இருக்கவேண்டு" மென்று வேண்டியதற்கிணங்கி விரோதிகிருது ஹூ வைகாசிமீ 30ம் தேதியாகிய சுபதினத்தில் மடாதிபதி ஸ்தானத்தை வகித்து ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளெனப் பட்டமும் பெற்றுப்பத்தாங்கிரியையையும் வெகுவிமரிசையாக முடித்துத் தமது குருமூர்த்தி நடத்திவந்த புண்ணியபாவனர் கதையில் வந்துவிட்டிருந்த ஞானவாசிட்டப்பாடத்தைத் தொடங்கி, ஸ்ரீ நாராயணசுவாமிகள் முதலியோருக்குப் பாடம் சொல்லும்போது மாதாபிதாக்கள் இறந்து பாவனர் மிகத்துயரமுற்றது போலவே அக்கதையின் சந்தர்ப்பத்தைச் சொல்லும்போது கண்டார் அனைவரும் சந்தர்ப்பத்தை நோக்கி ஆராமையோடு மிகவும் ஆச்சர்யமடைந்தனர். பின்னர் குருமூர்த்திகளின் சமாதிபூஜையை நடத்திவரும்படி சில சாதுக்களை அங்கிருத்தி அதற்கு வேண்டிய

பொருளாதிவசதிகளையும் செய்து,கோயிலூரையடைந்து ஸ்ரீ சாலிவாடீஸ்வரி ஸமேத ராஜகட்கபரமேஸ்வரரையும், தமது குருபரனான ஸ்ரீ ஆண்டவர் முதலிய முதியோராலயங்களையும் வணங்கி, அங்கு சீடர்களாலிடப்பெற்ற திவ்யமான கிருஷ்ணாசனத்திலமர்ந்து, சம்பிரதாயப்படி சாதன சதுஷ்டயமுடைய முமூட்சுக்களுக்கு வேதாந்த போதகாசிரியராய் இருந்து சுருதியுக்தி சுபானுபவங்களால் பிரம்மானுபவ நிலைமையைப் போதித்தும் கருணை முதலிய நான்கும் ஒருவடிவு கொண்டாற்போலவும், வாக்கிற் பிரகஸ்பதி எனவும், வித்தையில் வியாசரெனவும், ஞானத்தில் யாக்ஞவல்கியரெனவும். துறவில் தத்தாத்திரேயரெனவும், பொறுமையில் பூமிதேவியெனவும் விளங்கி வந்தனர்.

ஸ்ரீ ஞானதேசிகர் தீரச்செயல்கள்

மேலும் மடத்துக்காரியங்களையும் ஸ்ரீ கொற்றவாளீஸ்வரர் கோயில் நித்திய நைமித்திக காரியங்களையும் சீர்திருத்தம் செய்யும் விஷயத்தில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமில்லை. இவைகளுக்கெல்லாம் கொஞ்சமேனும் தளராத அபயம் முதலிய தெய்வசம்பத்தோடும் கூடின நம் குருமூர்த்தியவர்கள் கலங்காத நெஞ்சுடைமையை நில உலகில் யாவர்தான் அறியாதார்? அவைகளை விரிக்கிற் பெருகு மாதலின்

விரிக்கிலம். ஆனுல் கண்டார் மட்டில் விவகாரம் மிகுதி எனக்கருதினுரே யொழிய நமது குருதேவர்

"மாயவாசையை நீக்கிப் பற்றறுத்து வாதனேபோ
யுள் வெளியாய் வாகியத்தே, மேயவா சாரமெலா
மியற்றி யென்றும், சகத்திலே புறத்தொழிலி
லாரம்பித்துத் தனியிதயத் தாரம்
பஞ்சற்றுமின்றி, யகத்திலே
செயாதோ ஞய்ப்புறத்தே செய்வோனுகியே
யுலகில் விளையாடுவீரா"

என்று ஸ்ரீ சற்குணக் கடலான ராகவருக்கு ஸ்ரீவசிஷ்ட பகவான் உபதேசித்தருளியதற்கு இலக்கியமாய்ச் செய்து வந்தனர்.

பாடஞ் சொல்லுதலின் வன்மையைக் கூறுதல்

பிரமசபையில் வியாக்யான பீடத்து ஆசனத் தமர்ந்து தம்மிடம் சிரவணிக்கும் அதிகாரிகளுக்கு "காட்சியை எல்லாம் கண்ணதாய்க் கரைத்துக் கண்ணெழிந்து ஒருபொருளில்லா, மாட்சியை அளிக்க வல்லவன் குருவாம்" என்ற வண்ணம் போதிப்பதைக் கண்டோர், இவர் ஸ்ரீ ராமருக்கு உபதேசித்த புனித வசிஷ்ட முனிவரோ, அல்லது பார்க்கவருக்குபதேசித்த தத்தாத்திரேயரோ, அல்லது பைலாதி முனிகளுக்கும் இருக்காதி வேதங்களைப் பிரித்துபதேசித்தவரும் சாரீரக சூத்திரத்தின் கருத்தாவுமாகிய வேதவியாசரோ, சனந்தனர் முதலிய சீடர்களுக்கு அத்வைத மதத்தை

உபதேசித்த ஸ்ரீ சங்கரபகவத்பாதரோ, அல்லது தேவேந்திரன் சபையில் விளங்கும் திருமுனி பிரகஸ்பதிதானே, என்று கண்டோர் அனைவரும் கருதும் படி ஒவ்வொரு வாக்கியத்திற்கும் பலவிதபூர்வபக்கங் கள், அனேக முடிவுகள், சங்கை, சமாதானங்கள், சுருதி, மிருதி, புராணம், ஆகமம், வடமொழி, தென் மொழிகளில் தருக்கம், இலக்கணம், எழுவாய், பயனிலை, விசேடணம், விசேடியம், முதலிய விற்பத்தியோடு பிரதி தினமும் உபந்நியாசம் செய்வதுபோன்று புதிது புதி தாக யுக்திப்பிரமாணங்களோடு பாடஞ்சொல்லி வரு வதை அறிந்த பாடசாலை, வித்தியாசாலைகளிலிருக்கும் கனபாடிகள், சுப்பிரமணிய சாஸ்திரிகள், வடமொழி வித்தியார்த்திகள் மடத்தில் பாடம் ஆரம்பிப்பதற்கு முன்னமேயே தயாராக வருவது வழக்கமாக ஏற்பட்டு விட்டது. அதனால் ஆசிரியப்பெருமானும் அவ்வந்தணர் களுக்கு ஓர் ஆசனமிட்டும், அவர்கள் வரக் கொஞ்சம் காலதாமதமானாலும் அவர்களை எதிர்பார்த்தும் பாடம் சொல்லும்வழக்கத்தையும் கொண்டிருந்தனர். வடமொழி யில் தருக்கம், வியாகரணம், காவியம், நாடகம், அலங் காரம், சாகித்தியம், மீமாம்சாதிசாஸ்திரங்களைப் பல நாள் படித்துச் சாஸ்திரி பட்டம் பெற்ற பண்டிதசிரோ மணிகளும் எங்குருநாதரது திருவாய்மொழிக்கு எதிர் காண்பாராகின் அவர்களின் வித்தையின் மேம்பாட்டை அற்பமும் அறியாத அடியேன் எங்ஙனம் எடுத்தோது

வேன்? ஒருநாள் சுவாமிகளின் சகபாடியான ஸ்ரீவெள்ளியங்கிரி சுவாமிகள், சுவாமிகள் போலவே எல்லா விதத்திலும் சமமானவர்களாயிருந்தாலும், சுவாமிகள் அஞ்ஞவதைப் பரணி பாடஞ் சொல்லக் கேட்டிருந்து, மறுநாள் புஷ்பம் கட்டும் மண்டபத்தில் சாதுக்கள் முன்னிலையில், "நான் தான் அஞ்ஞவதைப்பரணியை மிகநன்ருய்க் கற்றுப்பாடம் சொல்லுபவன் என்று எண்ணினேன்; இடத்தின் விசேடமோ அறியேன்; பாடம் சொல்லும் ஆச்சரியத்தையாது கூறுவேன்." என்று தலையிலடித்துக்கொண்டார்கள்.

ஸ்ரீ அண்ணுமலை ஞானதேசிக சுவாமிகள் இரதத்தைப் பூர்த்தி செய்தலும், பள்ளியறையைப் பதப்படுத்தலும்.

தனது அருளிறை ஸ்ரீ திருநெல்லையம்மை பவனி வருவதற்கு ஆரம்பித்து முற்றுருதிருந்த இரதத்தை, ஓவியங்களையும், மணிகளையும் அமைத்து மிக உன்னதமாக இயற்றினர். இந்த இரதமிழுக்க அமுதும்பணமும் அளவிலுதவியும் புரிந்து ஸ்ரீ இராஜகட்கபரமேஸ்வரர் பள்ளியறையையும் பிரித்தெடுத்து, மற்ருேரிடத்தில் மிகஅழகாக இயற்றிஞர்கள்.

ஸ்ரீ அண்ணுமலை ஞானதேசிக சுவாமிகள் இயற்றிய திருப்பணிகள்.

திருக்களரில் கோயில் கொண்டுள்ள தமது குரு

மூர்த்திகளான திருக்களராண்டவரென்னும் காரணப் பெயர்பூண்ட ஸ்ரீ வீரப்பஞானதேசிக சுவாமிகளின் சமாதி ஆலயத்தையும் ஆண்டு அடியார்கள் வசித்து வரும் பொருட்டு, மடாலயத்தையும் கட்டுவதற்காகவும், அவை செவ்வனே நீடுழி நடந்து வருவதற்காகவும், தனவணிகரிடம் இலட்சக்கணக்கான திரவியங்களை ஆங்காங்கு சென்று திரட்டியும், ஸ்ரீ வீர. சுப்பையஞான தேசிகசுவாமிகளோடு ஸ்ரீநாராயண சுவாமி முதலியோர் களையும் கூட்டித் தொலைக்கு அனுப்பி, அவர்கள் மூலமாய் 75000/- ரூபாய் திரட்டியும் திருக்களர் ஆண்ட வருக்கு வாக்களித்திருந்த கோனுபட்டு ப. சு. பழநியப்ப செட்டியாரிடம் மாத்திரம் 25000/- ரூபாயை இனும் வாங்கியும், அவற்ருல் ஸ்ரீ. திருக்களராண்டவருக்குப் பிரமனும் மாலாகும் வண்ணம் உயர்ந்ததுண்டு பத்தரிப் புப்பணியில் கர்ப்பக்கிருகம், அருத்தமண்டபம், மகா மண்டபம் இவைகளை உயர்ந்த கருங்கல்லினுல் ஏராள மான பொருள் செலவிட்டுக்கட்டியும், ஆண்டு சாதுக்கள் வசித்துவர ஒரு மடம் இயற்றியும், திருக்களருக்குத் தென்புறம் சமீபமாக விளங்கும் மருதவனமென்னும் சிவாலயத்தைஜ் ஜீரணோத்தாரணம் செய்ய வேண்டிய பொருளளித்தும், மேற்சொன்னகோயில்களும், மடாலய மும் நடந்துவர மூலதனமாகப் பத்தொன்பது வேலி நஞ்சைப் பூமிகளைக் காவேரிப்பாய்ச்சலில் மடத்தின் சமீபமாகக் கிரையம் பெற்றும், திருக்களரென்னும்

அத்திருப்பதியில் விளங்கும் ஸ்ரீ அமிர்தவல்லி அம்மை சமேத பாரிஜாதவனேஸ்வரர் நித்திய பூஜைப்படித்தரத்திற்காக வேண்டிய பூமிகளை வாங்கியும் வைத்தனர்.

ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் சிதம்பரம் கொஸ்துக் கட்டளையைப் பூர்த்திசெய்து நடைமுறையில் கொண்டுவருதல்

தெரிசனத்தால் முத்தியளிக்கும் தில்லைச் சிற்றம்பலவன் திரு முன்னிலையில், நித்திய பாவாடைக் கட்டளை ஒன்று நடத்த எண்ணித் தமது குருநாதன், தமது கோவிலூர் மடத்திலிருந்து ரூ. 10000/-மும் கல்லல் மெ. ராம. வெள. இடமிருந்து ரூ. 10000/-மும் காரைக்குடி மெ. செ. ச. இடமிருந்து ரூ. 10000/-மும் ஆக ரூபாய் முப்பதினாயிரம் கணக்கில் குறிப்பிட்டிருந்ததைக் கண்டு, அவ்வாறே மேற்சொன்ன ரூபாய் முப்பதினாயிரத்தையும் கொண்டு முதல்வைத்து ஸ்ரீமந் நடேசப்பெருமானது திருச்சந்நிதியில், இன்றைக்கும் நடந்துவருகிற சம்பாஅன்னமும், தேவாமிர்தம் போன்று அதற்கு உபகரணமான கொஸ்து என்னும் துணையும் காலைசந்திக் கட்டளையாக நடந்துவரும்படி இயற்றினது உலகறியும்.

ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமி அவர்களின் அதிர்ஷ்டக் குறிகள்

ஸ்ரீ சுவாமிகள் தனரேகை உடையவராதலினால்,

மடாதிபதியான வருஷமுதல் ஜீவனகாலம் எட்டு வருஷம் வரையிலும் ஒரு வருஷங்கூட நஷ்டமாகாமல் கிராமங்கள் எல்லாம் முன்னிலும் மும்மடங்கு செழித்து விளைந்து, நெல்லும் ஏறிய விலையுடையதாய் இருந்தமையால் வருஷந்தோறும் மடத்துச் செலவுபோக 50000/-ம் ரூபாய் ரொக்கமாய்ச் செலவில்லாமல் கட்டிப்போட்டிருந்தது. இப்படி எந்த மடாதிபதி இருந்த காலங்களிலும் இருப்பு இருந்ததேயில்லை.

பிரம்ம வித்யா பிரசாரண சபையை நடத்துதல்

அறுபத்து நான்கு கலைஞானத்திலும் தேர்ந்த, ஸ்ரீ நாரதபகவானே பிரம்மவித்தையை அடையாமையால் சோகமுற்று, ஜனற்குமார முனிவரைச் சரணமடைந்தனரென்றால் இக்கலியின் வன்மையால் சோகமுறும் ஜனங்களெங்கே? பிரம்மவித்தைஎங்கே? ஆயினும் அவ் வித்தையாலேயே சமுசார சோகம் கடக்க வேண்டுமேயொழிய வேறுவழியில்லை. ஆதலின் அந்தச் சபையை நடத்த வேண்டுமென்று யத்தனம் செய்யும்போது தமது சகபாடியான ஸ்ரீ வெள்ளியங்கிரி சுவாமிகள் "சுவாமி இதற்கு ஏராளமான பொருள் செலவாகும். மேலும் நம் சம்பிரதாய வழக்கமன்று" என்று கூறினார்கள். அதற்கு உதாரமுதல் நற்குணங்களனைத்து மொன்றுமென உருவெடுத்த நமது குருபிரான் வெள்ளியங்கிரி சுவாமிகளைப் பார்த்து "சுவாமி செலவிட வழியில்லாமல்

திரண்டுகிடக்கும் பணத்தை என்ன அவித்துத் தின்கிறதோ?'' என்றும் "கொடுத்தான் றுய்ப்பினும் ஈண்டுங்காலீண்டும் மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம் விடுக்கும் வினையுலர்ந்தக்கால்'' என்றும் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினுனே'' என்றும் தக்க விடையைக்கூறிப் பிரம்ம வித்தியாசபையை நல்ல நாளில் தொடங்கிச் சில ஆண்டு நடந்துவர, அதை ஸ்ரீ திருநெல்லைநாயகி ஆடிப்பூர உற்சவத்தில் நடத்திஞல் யாத்ரீகர்களாயும், சுவாமி தரிசனத்திற்கு வருபவர்களாயுமுள்ள பொதுஜனங்களுக்குப் பயன்படுமென்று எண்ணி ஆடிப்பூர உற்சவத்தில் பதிஞெரு நாளிலும் காலை மாலை இரண்டு காலமும் அறிவின்மிக்க ஸ்ரீ வீர. சுப்பைய சுவாமிகள், சென்னை அருணசல சாஸ்திரிகள், கருங்குளம் பிரம்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள், மதுரை பிரம்மஸ்ரீ கல்யாணசுந்தரபட்டர், நீடாமங்கலம் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் முதலியோரையும் மற்றுமுள்ள தமிழ்ப்பண்டிதர்களையும் வரவழைத்து, அத்வைத சித்தாந்தத்தைப் பூர்வபக்ஷ சித்தாந்தங்களோடு, அநேக புராண இதிகாசக் கதைகளோடு ஸ்ரீ ஜனகபிரான் முன்னிலையில் வித்துவான்கள் நிறைந்தசபையில்யாக்ஞவல்கிய மகரிஷி முதலியோர் அத்வைத வாதஞ் செய்ததைப் போலவும், ஸ்ரீ தசரத சக்கிரவர்த்தி முதலியோர் முன்னிலையில் ஸ்ரீ வசிஷ்ட பகவான் இராமருக்கு எடுத்தோதியதைப்

போலவும், உபந்நியாச அமிர்தரசம் பொழியும்படிச் செய்தும், இடைஇடையே தேவார திருவாசக பாராயணமும் நடத்தியும், திருவிழாவினிறுதியில் அவரவருக்குத்தக்கவண்ணம் பட்டும், பீதாம்பரமும், திரவியமும், விருப்பப்படி ரூ. 10000-ம் வரை சன்மானங்களளித்தும், இவ்வாறு ஒவ்வொரு வருஷமும் பிரம்ம வித்யா சபோத்ஸவத்தையும் நடத்திவந்தனர்.

ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் வேதாந்த ஜெயக்கொடி நாட்டினது.

இவ்வாறு பிரம்மவித்யா பிரசாரண சபையானது இனிது நடந்துவரும் காலத்திலே, காரைக்குடி முதலிய சுற்றூர்களிலெல்லாம் அத்வைத பிரம்ம வார்த்தையை எல்லா ஜனங்களும் பேசுவாராயினர். இதனைக் கேட்டு வரும் காரைக்குடி அறுபத்துமூவர் மடத்துச் சொக்கலிங்க ஐயா முதலிய சில சைவாபிமானிகளுக்குப் பொருமையுண்டாகி தனக்குத் துணையாகச் சிதம்பரம் அம்பலவாண நாவலர் முதலிய சில கற்றவர்களை வைத்துக்கொண்டு, துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் சிறிய புத்தகம், பத்திரிகை மூலமாகவும், ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளையும், வேதாந்தத்தையும், வேதாந்தம் படித்தவர்களையும், கோவிலூரரையும், விஷ்ணுமூர்த்தியையும் நிந்தைபுரிந்து வந்தனர். அதை அறிந்த எமது

குருபரனுர், அவர்களை நேரில் மறுக்க எழும்பும்போது காரைக்குடி வாசிகளான சில வைசியர்களும், சாதுக்களும், பொதுஜனங்களும் ஸ்ரீ சுவாமிகளிடம் வந்து நாம் சைவவுலகத்தை மறுக்கப்புகில் அதிக கலகம் விளைந்து சில வைசியர்களுக்கும் நம் மடத்தில் அதிருப்தியுண்டாகும். ஆதலின் மறுப்பு வேண்டாமென்று வேண்டினுர்கள் அதற்கு அபயம் முதலிய தெய்வ சம்பத்து வாய்ந்த அஞ்சாநெஞ்சுடைய நமது குரவர்சிகாமணியவர்கள் "நாம் அத்வைத ஸ்தாபனுச்சாரியாள் பரம்பரை மடத்தில் தலைமையை வகித்துக்கொண்டு ஒருவன் பிரமாணமான அத்வைத நிந்தை புரிவானேல் அதைக் கேட்டுக்கொண்டு, இம் மடத்திலுங்கூடவா ஜீவித்துக்கொண்டிருப்பது? அதனுல் யாது விளையினும் விளைக. உண்மையில் ஸ்ரீ சங்கர பகவத் பாதாச்சாரியாரவர்கள் கிருபை நம்மிடத்திலிருக்கும்போது பிருகஸ்பதியானுலும், நமது அத்வைதத்தை வென்றுவிடுவரோ? நீங்கள் சந்தோஷமாகப் பார்த்துக்கொண்டிருப்பீர்களாக" என்று குரவர் பெருமானுன ஸ்ரீமத் சுவாமிகள் காரைக்குடியில் விஜயதசமி மண்டபத்தில் "மகா விராட் சபை" என்று ஒரு சபை ஏற்படுத்தி, மகா மண்டலேஸ்வர நியாயசந்திர, வேதாந்த பாஸ்கர, வீர சுப்பைய ஞானதேசிகேந்திர சுவாமிகள் முதலிய சாதுக்களையும், பண்டித சிரோமணியாகிய சாஸ்திரிகளையும் வரவழைத்து அவர்களது அத்வைத துவேஷபுத்தி

நீங்கும்படி, அரிய பெரிய உபந்நியாசங்களைச் செய்து வைத்து. அத்வைத துவேஷகரை நேரில் வந்து மறுக்கும்படி அன்னோருக்கு ஆள்மூலம் வரும்படி சொல்லிவிட்டும் அவர் வரவில்லை. இவ்வாறு அச்சபை சில தினங்கள் மாலையில் மாலையில் நடைபெற்றது. முடிவில் அவ்விடத்தில் தானே அத்வைத விஜயத்துவஜ ஸ்தாபனம் செய்து, ஸ்ரீ ஜகத்குரு சங்கர பகவத் பூஜ்ய பாதாச்சாரிய சுவாமிகளின் திரு உருவப்படத்திற்குஅலங்கார ஆராதனைகள் செய்து, காரைக்குடியை வலமாக வந்துஅநேகவேதபாராயணக் கோஷ்டியுடன் கோவிலூர் மடம் வந்தனர். இவர்களல்லவோ குரு ஸ்தானத்தை வகிக்கும் சிங்கம்?

ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் சிருங்ககிரிஸ்ரீநரசிம்ம பாரதி அவர்களின் கும்பாபிஷேகத்திற்குச் சென்று வருதல்

இவ்வாறிருக்கும் நாளிலே சிருங்ககிரி ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பூஜ்யபாதாசாரிய சுவாமிகளின் பீடத்திலேகுருமூர்த்தமான ஸ்ரீசந்திரசேகர பாரதிசுவாமிகள், தமது குருமூர்த்தமாய்த் தமக்கு முன் குருமூர்த்தமாய் எழுந்தருளி விளங்கின ஸ்ரீ சச்சிதாநந்த சிவாபிநவ நரசிம்ம பாரதி சுவாமிகளின் சமாதிஆலயத் திருப்பணி முற்றி, அதன் கும்பாபிஷேகத்திற்கும், ஆண்டுபீட

ரூபமாய் விளங்கும் ஜெகன்மாதாவான ஸ்ரீ சாரதாதேவி கும்பாபிஷேகத்திற்கும் வரும்படியாகத் திருமுகமனுப்பினுர்கள். அது கண்ட நமது குருமூர்த்திகளும், தமது குருமூர்த்திகள் பலர் மூலம் உதவிபுரிந்த 50000 ரூபாயிலும் முடிவு பெற்ற இரு திருப்பணிகளுமாதலினுல், மனமிக மகிழ்வுற்றுத் தமது சீடவர்க்கங்களோடு ஒய்யெனப் புறப்பட்டுப் போகும்போது, சென்னையிலிருந்த வீர. சுப்பைய சுவாமிகளையும் அழைத்துச் சென்று, அங்குள்ள சர்வாதிகாரிகளால் உதவப்பட்ட ஜாகையில் தங்கினுர்கள். அப்போது இவர்களுக்கு உபசாரம் சொல்லவந்த ஆஸ்தான சாஸ்திரிகளிடம் வீர. சுப்பைய சுவாமிகள் பிரபஞ்சம்மித்தை என்பதற்கு இப்பிவெள்ளியைத் திருஷ்டாந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறதே? வெள்ளியில் பிராதிபாசிகத்துவம் இருக்கிறது. அது பிரபஞ்சத்திலில்லை. ஆதலின் அது உபாதியாகுமே? இவ்வனுமானம் எப்படி சத்தனுமானமாகும்? என்று ஒரு கேள்வி கேட்டது. அதற்குச் சாஸ்திரிகள் தனக்குத் தெரிந்த சமாதானம் சொல்லிவிட்டுச்சென்று, ஆச்சார்யரவர்கள் இடத்திலும் ஒருவர் படித்தவர் வந்திருக்கிருர். அவர் இம்மாதிரி கேட்டாரென்றும் கூறிவிட்டார்கள். அன்று மாலை மூன்று மணிக்கு நமது குருநாதர் சாதுக்களோடு சென்று, ஆச்சார்யசுவாமிகளைத் தெரிசித்தார்கள். அப்போது ஆச்சார்ய சுவாமிகள் வீர. சுப்பைய சுவாமிகளைநோக்கி, "சாஸ்திரிகள் சொன்ன சமாதானத்

தினும் மிகவும் பொருத்தமான சமாதானத்தைச்சொல்லி விட்டு, ஸ்ரீ அண்ணுமலை ஞானதேசிக சுவாமிகளை நோக்கி "சுபாசுபாப்பியாம் மார்க்காப்யாம்லகந்தி வாஸனுசரித்பௌர்ஷேண பிரயத்நேன யோஜநீயாசு பேபதி" என்று புருஷப் பிரயத்தனமே முக்கியம் பந்த மோக்ஷங்களுக்கென்று அன்னுவயமுடன் பாட்டால் ஒருமணிநேரம் உபந்நியாசம் செய்து "காரைக்குடியில் அத்வைத ஸ்தாபனஞ்செய்ததைக் கேள்வியுற்ரும். அதனுல்மனமகிழ்ந்தோம்" என்றும்குசலப் பிரசினங்கள் செய்தார்கள். மறுநாள் இரு கும்பாபிஷேகங்களையும் அதில் நடந்த வைபவங்களையும் தரிசித்து மகிழ்ந்தனர். மைசூர் மஹாராஜாவின் குடும்பமும், ஏனைய அந்தணர் கூட்டமும், காண்டற்கரியதோர்காட்சியாகவிளங்கினது.

பிறகு நமது குருமூர்த்திகள் ஸ்ரீ நரசிம்மபாரதி சுவாமிகளின் சமாதிலிங்கத்திற்கு, அதிகப் பணச் செலவில்செய்துகொண்டுபோன நாகாபரணம், குவளை தங்கத்தில் கல் இழைத்த உருத்திராக்க மகரகண்டிகை. ஆபரணம், சாரதாதேவிக்குப் பீதாம்பரம் முதலிய சன்மானங்களையும் ஆச்சாரிய சுவாமிகள் மனமுவக்கச் சமர்ப்பித்தும், நரசிம்மபாரதி சுவாமிகளுக்கு நித்திய பூஜை நடந்துவர சன்மானமாக ரூபாய் ஆயிரம் குரு காணிக்கையாகக் கொடுத்தும், மற்றும் சிலசில்லரை தானங்கள்புரிந்தும், சிலநாள் அவர்களின் உபசாரத்தா

லங்கிருந்தபோது, நமது குருமூர்த்திகளின் உதாரமுதல் நற்குணங்களைக் கண்ட சர்வாதிகாரி மைசூருக்கு அழைத்துச் சென்று, அரண்மனை அதிகாரிகளின் உபசாரத்தையும் செய்துவைத்துக் கோவிலூருக்கு அனுப்பி வைக்க, அடியார் கூட்டத்துடன் திரும்பி வந்தனர்.

ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளுக்குக் கல்வியின் ஆர்வம்

இவ்வாறு பல தேசாசார சாதுவிருத்திகளையும், நன்குணர்ந்த நமது குருமூர்த்தியவர்கள் தற்காலம் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் உண்மையில் அத்வைதக் கருத்துடைய கணேசபுராண முதலிய சில புராணங்கள், மூலத்திலில்லாத "மன்னு நின் பிரமத்தை நெருப்பிலிடு" என்பது முதலிய சில ஆபாசக்குளறுபடியான வார்த்தைகளையுடையனவாகவிருப்பதைத் தமது வடமொழிக் கல்வியின் பண்டிதத் தன்மையால் கண்டு மனஞ் சகிக்காமல், பதினெண்புராணங்களையும் தாமே மொழிபெயர்த்துக் கோவிலூர் பதிப்பென்று அச்சிட்டுத் தமிழுலகுக்கு இனமாகவே உதவிபுரியத் திருவுளம் கொண்டு, பிரசு முதலிய அச்சு வாகனங்களை எண்ணாயிரம் ரூபாய்க்கு வாங்கினார்கள். மேலும் "பெற்றவர்க்கே பெறும் வருத்தம் தெரியுமாபோல் கற்றவர்க்கே கற்கும்

வருத்தம் தெரியுமென்னும் நியாயப்படி, மடத்திலுள்ள சாதுக்களெல்லாம் வியுற்பத்தியோடு வேதாந்தம் கற்றிருத்தல் வேண்டுமென்று பண்டிதர்களையும் சாஸ்திரிகளையும் வைத்து தென்மொழி வடமொழிகளைப் படிப்பித்துக் கொண்டும் வந்தார்கள். அதனாலன்றோ சில நூல்களை மொழிபெயர்த்து அச்சிடுவேன் என்று கூறிய வீர. சுப்பைய சுவாமிகள், வீர. காசிகாநத்த சுவாமிகள், சி. சுப்பைய சுவாமிகள், மற்றும் சில சாஸ்திரிகள், பண்டிதர்முதலியோர்களுக்குப்புத்தகங்களச்சிடஅவரவர் விரும்பிய வண்ணம் வேண்டிய பொருள்கொடுத்தும் உதவிபுரிந்து வந்தார்கள். இம்மகான் விதேகமுக்திக்கு எதிராகாது இன்னும் சிலகாலம் ஜீவன் முக்தித்தசையோடுஇருக்கின், சாதுக்களும், சாஸ்திரங்களும் தமிழுலகும் பெரும்பயனை அடைந்திருப்பார்களென்பதற்கையமின்று. ஜீவனகாலம்நீடியாமையால்மேற்சொல்லிய சில காரியங்கள் குன்றினவாயினும் "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து" என்னும் மறைமொழிப்படி ஊழின்பாற்றேடங்காண்பரே அல்லாது, குருமூர்த்திகளின் ஊக்கத்தின் பாற்றேடங்காணார். மற்றே புகழ்வர்.

ஸ்ரீ அண்ணுமலை ஞானதேசிக சுவாமிகள் அவர்களின் விதேகமுத்தி.

இவ்வாறு குரவர் சிகாமணியாகிய ஸ்ரீ அண்ணுமலை

ஞானதேசிக சுவாமிகளவர்களும், சுருதி,ஆசாரியாருக்கு கூறிய சுரோத்திரிய பிரம்ம நிஷ்டா இலக்கணத்தோடு சாதன சதுஷ்டயமுடைய உத்தமாதி முமுக்ஷு அதிகாரிகளுக்கு அபயஸ்தானமானபிரம்மோபதேசம் செய்தும், சாதனமின்றியவர்களுக்கு மனத்தூய்மைக்கேதுவான கருமம், உபாசனைகளை உபதேசித்துக் கொண்டும் இம்மையில் பிருகஸ்பதி எனப் பலரும் புகழும்படி வேதாந்த பாடம் சொல்லிக்கொண்டும், ஸ்ரீ சாலிவாடீஸ்வரி சமேத கொற்றவாளீஸ்வரருடையவும், ஆண்டவருடையவும், நித்திய நைமித்திகாதி பூஜைப் படித்தரங்களையும், யாதொரு குறைவின்றி பழுதின்றி நடத்திக்கொண்டும், தாம் ஏற்றுக்கொண்டகுருபீடத்தை எட்டுவருட காலம் அலங்கரித்துக்கொண்டிருந்தார்கள். தமக்குப் பிராரப்தக்ஷயமாய் விதேக முக்தி கிட்டிவருவதை உள் முகத்தில் நன்குணர்ந்து, அப்போது திருவண்ணமலை ஈசானியமடத்தில் மடாதிபதியாக இருப்பவர்களும், திருக்களராண்டவரிடம் பாடம் கேட்டுச் சீடராகவும், தம்மிடமும் சில பாடம் கேட்டுப் பேரன்புகொண்டவர்களாகவும், சாந்த குணமே ஓர் உருவு கொண்டாற்போல விளங்கும் ஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகளவர்களை வரவழைத்துக் "கோவிலூர் மடாலயத்தில் இனிக்குருமூர்த்தமாய் வீற்றிருந்து நம்மைப்போல் நடந்துவர வேண்டிய" தென்று சொல்லிப் படுக்கையில் வைத்திருந்த ஒரு எலுமிச்சம் பழத்தை எடுத்து ஆசீர்வாதத்

தோடு கொடுத்துவிட்டுத் தனது சொரூப நாட்டத்திலே இருந்து கலி 5020க்கு சாலிவாகன சகாப்தம் 1841க்கு சித்தார்த்தி ஞூ வைகாசி மீ 8 உ 1919 சௌமிய வாரம் உத்தர அயனம் வசந்த ரீது கிருஷ்ணபட்சம் சஷ்டிதிதியும் சிம்மலக்கினமும் திருவோண நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் பகல் ஒரு மணிக்கு அகண்ட பரிபூரண சச்சிதானந்த சிவசொரூபமானுர்கள். இம்மஹோன்னத மாட்சிமை யுடைய மஹாத்மபுருடரது திருமேனி கோவிலூர்மடத்திலேயே சமாதிசெய்யப் பெற்றுவிளங்குகிறது. அன்பர்கள் தரிசித்து தந்தம் இஷ்டகாமியார்த்தங்களைப் பெற்றுவருகிருர்கள். குருபிரான் சந்நிதானம் நீடூழி வாழ்க!

———

உ

சிவமயம்

பரிபூரணச் செய்யுள்.

ஐயா யிரத்திருப தாண்டுகலி சித்தார்த்தி
வைகாசி யெட்டில் வருபுதனில் – மொய்யார்
திருவோணஞ் சஷ்டிசிம்மஞ் சேர்நாள்வீ டுற்றுன்
குருதேவண் ணுமலையெங் கோன்.

கலி ஐயாயிரத் திருபது சித்தார்த்தி ஆண்டு வைகாசி யெட்டில் வருபுதனில் திருவோணம் சஷ்டி சிம்மம் சேர்நாள்வீ டுற்றுன்.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
	8	நாமகரணம	நாமகரணம்
	26	பிராசாரண	பிரசாரண
3	1	ன்னிகையை	கன்னிகையை
9	5	தேங்கும்	தோங்கும்
10	24	இல்லல்	இல்ல
16	15	அபப்யி	அபிப்பி
17	9	வரத்தி	வர்த்தி
18	23	சுவாமி	சுவாமிக
26	17	களைபும்	களையும்
26	22	பத்திரிகேதாரஞ்	பத்திரிகேதாரஞ்
26	23	வகிக்	வசிக்
28	18	வர்கள்	வர்கள் திருக்களரில்
29	9	மூர்த்திகளிள்	மூர்த்திகளின்
33	17	பாமேஸ்வரர்	பரமேஸ்வரர்
46	4	ரிது	ருது